# T.P.M Sunday School



## Standard : 2



பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; நீதி:22:6

# TPM ஞாயிறுபள்ளி
# 2-ம் வகுப்பு பாடங்கள்

## I. பாடங்கள்

1. ஆபிரகாமின் விருந்தினர்
2. லோத்து சோதோமைவிட்டு ஓடிப்போனது
3. ஆபிரகாம் ஈசாககைப் பலியாக ஒப்புக்கொடுத்தது
4. ஏசா சேஷ்டபுத்திரபாகத்தை இழந்தது
5. யாக்கோபு கண்ட சொப்பணம்
6. யாக்கோபு தேவதூதனோடு போராடியது
7. யோசேப்பின் இரு சொப்பணங்கள்
8. சிறைச்சாலையில் யோசேப்பு
9. எகிப்தில் யோசேப்பு (பகுதி I)
10. எகிப்தில் யோசேப்பு (பகுதி II)
11. முப்பத்தெட்டு வருடங்களாக வியாதியாயிருந்த மனு‘ன் சுகமாக்கப்பட்டது
12. மிகுதியான மீன்களைப்பிடித்தல்
13. கர்த்தராகிய இயேசு திமிர்வாதக்காரனைச் சுகமாக்கியது
14. கர்த்தராகிய இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலரைத் தெரிந்தெடுத்தது
15. நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சுகம் பெற்றது
16. கர்த்தராகிய இயேசு நாயீனூர் விதவையின் மகனை உயிரோடெழுப்பியது
17. கர்த்தராகிய இயேசு பிள்ளைகளின் நண்பர்
18. கர்த்தராகிய இயேசு குருடனாயிருந்த பர்திமேயுவுக்குப் பார்வையளித்தது
19. விதவையின் காணிக்கை
20. கர்த்தராகிய இயேசு காற்றையும் கடலையும் அமர்த்தினது

# MEMORY VERSES (STD 2)

| L.No | Verse |
| --- | --- |
| 1 | சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள், கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள். |
| 2 | உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். |
| 3 | என் பிள்ளைகளே , வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக் கடவோம்.. |
| 4 | இதோ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு. |
| 5 | என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும் , கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார். |
| 6 | உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். |
| 7 | கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார். |
| 8 | உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். |
| 9 | ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். |
| 10 | நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு. |
| 11 | இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். |
| 12 | நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். |
| 13.1 | அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. |
| 13.2 | இயேசு அவர்களை நோக்கி, தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். |
| 14 | உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்˙ அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். |
| 15 | அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார். |
| 16.1 | இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலேசெய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? |
| 16.2 | தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான். |
| 17 | எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கையை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார். |
| 18 | என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், அவர் எனக்குச் செவிக்கொடுத்தார். |
| 19 | உன தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும், அன்புக்கூறுவாயாக என்பதே பிரதான கற்பனை. |
| 20 | அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும். |

# ஆபிரகாமின் விருந்தினர்

(ஆதியாகமம் 18 : 1 - 14, 22,23 ; 19 : 1)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ரோமர் 12 : 10

சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள் ; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்.

**II** *போதனை* : (2 Marks)

நாம் யாவரையும் உபசரிக்கிறவர்களாகவும் யாவரிடத்திலும் இரக்கமும் அன்பும் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் நம்மைக் குறித்து விரும்புகிறார்.

**III** *ஒரு வார்த்தையில் விடையளி* : (1 Marks)

**1.** கர்த்தர் ஆபிரகாமுக்கு எங்கே தரிசனமானார்?
மம்ரேயின் சமபூமியில் (ஆதி. 18 : 1)

**2.** பகலின் உஷ்ண வேளையில் ஆபிரகாம் எங்கே உட்கார்ந்திருந்தான்?
கூடார வாசலில் (ஆதி 18 : 1)

**3.** ஆபிரகாம் கூடாரவாசலில் உட்கார்ந்து கொண்டிருந்த போது, எத்தனை புருஷர் தனக்கு எதிரே நிற்பதைக் கண்டான்?
மூன்று புருஷர் (ஆதி. 18 : 2)

**4.** ஆபிரகாம் தன்னுடைய கூடார வாசலுக்கு வந்த மூன்று புருஷர்களின் இருதயத்தை திடப்படுத்தும்படி அவர்களுக்கு என்ன கொண்டு வந்தான்?
அப்பம் (ஆதி. 18 : 5)

**5.** ஆபிரகாம் எத்தனைபடி மாவு எடுத்து அப்பம் சுடும்படி சாராளிடம் கூறினான்?
மூன்று படி (ஆதி 18 : 6)

**6.** ஆபிரகாமின் மனைவியின் பெயர் என்ன?
சாராள் (ஆதி. 18 : 10)

**7.** ஆபிரகாமின் கூடாரவாசலிலிருந்து தேவன் பேசினதைப் பின்புறமாக நின்று கேட்டுக் கொண்டிருந்தது யார்?
சாராள் (ஆதி. 18 : 10)

**8.** தேவன் கொடுத்த வாக்குத்தத்தை கேட்டு தன் உள்ளத்திலே நகைத்தது யார்?
சாராள் (ஆதி. 18 : 12)

**9.** சாராள் உள்ளத்திலே நகைத்ததை கேட்டது யார்?
கர்த்தர் (ஆதி. 18 : 13)

**10.** கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ என்று ஆபிரகாமிடம் கேட்டது யார்?
கர்த்தர் (ஆதி. 18 : 14)

**IV** ***ஒரு வாக்கியத்தில் விடையளி*** : (2 Marks)

**1.** ஆபிரகாமின் கூடாரவாசலுக்கு வந்த மூன்று புருஷர் யார்?
கர்த்தரும், இரண்டு தூதரும் ஆபிரகாமின் கூடாரவாசலுக்கு வந்தார்கள்.
(ஆதி. 18 : 33, 19 : 1)

**2.** மூன்று புருஷர் ஆபிரகாமின் கூடார வாசலுக்கு வந்த போது ஆபிரகாம் சாராளை என்ன செய்யச் சொன்னான்?
ஆபிரகாம் சாராளிடம் நீ மூன்றுபடி மெல்லிய மாவு எடுத்து அப்பம் சுடு என்றான். (ஆதி 18 : 6)

**3.** மூன்ற புருஷர் ஆபிரகாமின் கூடாரவாசலுக்கு வந்தபோது, அவன் மாட்டு மந்தைக்கு ஓடி என்ன செய்தான்?
ஒரு இளங்கன்றைப் பிடித்து வேலைக்காரன் கையில் கொடுத்து சமைக்கச் சொன்னான். (ஆதி. 18 : 7)

**4.** ஆபிரகாம் தன்னுடைய கூடாரத்திற்கு வந்த மூன்று புருஷர் புசிக்கும்படி அவர்களுக்கு என்ன கொடுத்தான்?
ஆபிரகாம் அவர்களுக்கு அப்பம், வெண்ணெய், பால், சமைத்த கன்று ஆகியவற்றை கொடுத்தான். (ஆதி. 18 : 6, 8)

**5.** தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் என்ன?
தேவன் ஆபிரகாமிடம் ' உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். (ஆதி 18 : 10)

**6.** தேவன் கொடுத்த வாக்குத்தத்தை விசுவாசிக்காமல், சாராள் தன் உள்ளத்திலே கூறிக் கொண்டது என்ன?
சாராள் தன் உள்ளத்திலே நகைத்து நான் கிழவியும் ' என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ என்றாள்
(ஆதி. 18 : 12)

**7.** கர்த்தர் எவ்வாறு தன்னுடைய வாக்குத்தத்தை ஆபிரகாமுக்கு உறுதிப்படுத்தினார்?
கர்த்தர் ஆபிரகாமிடம், கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவகாலத் திட்டத்திலே திரும்ப வருவேன் . சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். (ஆதி. 18 : 14)

***************

வகுப்பு : 2 | பாடம்-2 | ஞாயிறு பள்ளி

# லோத்து சோதோமைவிட்டு ஓடிப்போனது

(ஆதியாகமம் 18 : 20, 21, 19 : 1 - 26)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 யோவான் 2 : 17

உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

**II** *போதனை* : (2 Marks)

பாவ உலகத்தை விட்டு, தங்களைப் பரலோகத்திற்கு ஆயத்தமாக்கிக் கொள்ளும்படியாக கர்த்தர் தம்முடைய மிகுந்த இரக்கத்தினிமித்தமாகத் தம் ஜனங்களை எச்சரிக்கிறார்.

**III** *ஒரு வார்த்தைகளில் விடையளி* : (1 Marks)

**1.** எந்தப் பட்டணங்களின் பாவம் மிகவும் கொடிதாயிருந்தது?
சோதோம், கொமோரா (ஆதி. 18 : 20)

**2.** எந்தப் பட்டணத்தின் கூக்குரல் பெரிதாயிருந்தது?
சோதோம் , கொமோரா (ஆதி 18 : 20)

**3.** சோதோம் கொமோராவின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்று ஆபிரகாமிடம் கூறியது யார்?
கர்த்தர் (ஆதி. 18 : 21)

**4.** லோத்து எங்கே உட்கார்ந்திருந்தான்?
சோதோமின் வாசலில் (ஆதி. 19 : 1)

**5.** எத்தனை தூதர்கள் சோதோமுக்கு வந்தனர்?
இரண்டு (ஆதி 19 : 1)

**6.** லோத்து தூதர்களுக்கு என்ன கொடுத்தான்?
புளிப்பில்லா அப்பங்கள் (ஆதி. 19 : 3)

**7.** சோதோம் பட்டணத்திற்கு வந்த தூதர்களை தன் வீட்டில் ஏற்றுக் கொண்டது யார்?
லோத்து (ஆதி. 19 : 3)

**8.** தூதர்களுக்கு தீங்கு செய்யும்படி லோத்தின் வீட்டிற்கு வந்தது யார்?
சோதோமின் மனிதர் (ஆதி. 19 : 4, 5)

**9.** சோதோமின் மனுஷருக்கு குருட்டாட்டம் பிடிக்கும்படி செய்தது யார்?
தூதர்கள் (ஆதி. 19 : 11)

**10.** தேவனுடைய தூதை லோத்துக்கு கொடுத்தது யார்?
தூதர்கள் (ஆதி. 19 : 13)

**11.** கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப் போகிறார் என்று லோத்து யாரிடம் கூறினான்?
தன்னுடைய மருமக்கள்மாரிடம் (ஆதி. 19 : 14)

**12.** லோத்தின் வார்த்தை யாருடைய பார்வைக்கு பரியாசம் பண்ணுகிறதாகக் காணப்பட்டது?
லோத்தின் மருமக்கள்மாரின் (ஆதி. 19 : 14)

**13.** லோத்து தாமதித்துக் கொண்டிருந்த போது அவனை துரிதப்படுத்தியது யார்?
தூதர்கள் (ஆதி. 19 : 15)

14. தூதர்கள் லோத்தை எங்கே ஓடிப்போகும்படி கூறினார்கள்?
மலைக்கு (ஆதி. 19 : 17)

15. தேவன் யாருடைய பிராணனைக் காக்கும்படி தமது கிருபையைப் பெரிதாக விளங்கப் பண்ணினான்?
லோத்து (ஆதி. 19 : 19)

16. லோத்து மலைக்கு ஓடிப்போவதற்கு பதிலாக எங்கே போகும்படி தூதர்களிடம் அனுமதி கேட்டான்?
அருகில் இருந்த சிறிய ஊருக்கு ஓடிப்போக அனுமதி கேட்டான். (ஆதி. 19 : 20)

17. சோதோமிலிருந்து வந்தபின்பு லோத்து எந்த ஊரில் போய் தங்கியிருந்தான்?
சோவார் (ஆதி. 19 : 22)

18. கர்த்தர் சோதோம் கொமோரா பட்டணங்களை எவ்வாறு அழித்தார்?
வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி அழித்தார். (ஆதி. 19 : 24, 25)

19. பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனது யார்?
லோத்தின் மனைவி (ஆதி 19 : 26)

20. லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்த போது அவளுக்கு என்ன நேரிட்டது?
உப்புத் தூண் ஆனாள் (ஆதி 19 : 26)

**IV** <u>*ஒரு வாக்கியத்தில் விடையளி*</u> : (2 Marks)

1. லோத்தின் வீட்டு வாசலை தேடித்தேடி அலுத்துப் போனவர்கள் யார் ? ஏன்?
1) சோதோமின் மனுஷர்
2) அவர்களுக்கு குருட்டாட்டம் பிடித்தது (ஆதி. 19 : 11)

2. தூதர்கள் லோத்துக்கு கொடுத்த தேவனுடைய தூது என்ன?
தூதர்கள் லோத்திடம் 1) நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப் போகிறோம். 2) பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து உன் மனைவியையும் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக் கொண்டு போ என்று சொன்னார்கள். (ஆதி. 19 : 13 - 15)

3. தூதர்கள் லோத்தையும் அவன் குடும்பத்தையும் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய் விடக்காரணம் என்ன?
கர்த்தர் அவன் மேல வைத்த இரக்கத்தினால் தூதர்கள் அவனை வெளியே கொண்டு போய் விட்டார்கள். (ஆதி 19 : 16)

4. லோத்து சோதோம் பட்டணத்தை விட்டுப்போக தாமதித்த போது தூதர்கள் என்ன செய்தார்கள்?
தூதர்கள் அவன் கையையும் , அவன் மனைவியின் கையையும் அவன் குமாரத்திகளின் கையையும் பிடித்து பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள். (ஆதி. 19 : 16)

5. தூதர்கள் லோத்தை பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டபின்பு அவனுக்கு கொடுத்த கட்டளை யாவை?
தூதர்கள் லோத்திடம் ,
1) உன் ஜீவன் தப்ப ஓடிப்போ
2) பின்னிட்டுப் பாராதே
3) இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே
4) நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்கள். (ஆதி 19 : 17)

6. தூதர்கள் லோத்தை மலைக்கு ஓடிப்போகும்படி கூறியபோது அவன் அவர்களிடம் என்ன சொன்னான்?
லோத்து தூதர்களிடம் , “அப்படியல்ல ஆண்டவரே மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது. தீங்கு என்னைத் தொடரும். நான் மரித்துப் போவேன்” என்றான். (ஆதி. 19 : 19)

***********************

# ஆபிரகாம் ஈசாக்கைப் பலியாக ஒப்புக் கொடுத்தது

(ஆதியாகமம் 21 : 5 ; 22 : 1 - 14)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 யோவான் 3 : 18

என் பிள்ளைகளே , வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக் கடவோம்..

**II** *போதனை :* (2 Marks)

ஆபிரகாமைப் போல நாம் எல்லாவற்றையும் பார்க்கிலும் தேவனை அதிகமாய் நேசிக்கவும், முற்றிலுமாய் அவருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

**III** *ஒரு வார்த்தைகளில் விடையளி :* (1 Marks)

**1.** ஆபிரகாமின் குமாரன் யார்?
ஈசாக்கு (ஆதி. 21 : 5)

**2.** ஈசாக்கின் தகப்பன் யார்?
ஆபிரகாம் (ஆதி 21 : 5)

**3.** ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாம் எத்தனை வயதாயிருந்தான்?
நூறு வயது (ஆதி. 21 : 5)

**4.** ஆபிரகாமை சோதித்தது யார்?
தேவன் (ஆதி. 22 : 1)

**5.** தேவன் யாரை பலியிடும்படி ஆபிரகாமிடம் சொன்னார்?
ஈசாக்கை (ஆதி 22 : 2)

**6.** தேவன் ஆபிரகாமை எங்கே பலியிடச் சொன்னார்?
மோரியா தேசத்து மலைகள் ஒன்றின் மேல் பலியிடச் சொன்னார் (ஆதி. 22 : 2)

**7.** தேவன் ஆபிரகாமிடம் ஈசாக்கைத் தகனபலியாகப் பலியிடு என்று சொன்ன போது அவன் என்ன செய்தான்?
ஆபிரகாம் கீழப்படிந்து அதிகாலையில் எழுந்து புறப்பட்டுப் போனான்.(ஆதி 22 : 3)

**8.** ஆபிரகாம் எத்தனை நாள் பிரயாணம் செய்து ஈசாக்கை பலியிடும்படி தேவன் குறித்த இடத்தை அடைந்தான்?
மூன்று நாள் (ஆதி. 22 : 4)

**9.** ஆபிரகாம் பலியிடும்படி மோரியா தேசத்திற்குப் போகும்போது எத்தனை பேரைக் கூட்டிக் கொண்டு போனான்?
வேலைக்காரரில் இரண்டு பேரையும் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு போனான்.(ஆதி.22:3)

**10.** ஆபிரகாம் தகனபலிக்கு கட்டைகளை எடுத்து யார் மேல் வைத்தான்?
ஈசாக்கின் மேல் வைத்தான் (ஆதி. 22 : 6)

**11.** ஆபிரகாமிடம் தகனபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே என்று கேட்டது யார்?
ஈசாக்கு (ஆதி. 22 : 7)

**12.** ஆபிரகாம் யாரைக் கட்டி பலிபீடத்தின் மேல் கிடத்தினான்?
ஈசாக்கை (ஆதி 22 : 9)

13. ஆபிரகாம் ஈசாக்கை வெட்டும்படி கத்தியை எடுத்தபோது அவனைக் கூப்பிட்டது யார்?
கர்த்தருடைய தூதனானவர் (ஆதி 22 : 11)

14. கர்த்தருடைய தூதன் ஆபிரகாமை எங்கேயிருந்து கூப்பிட்டார்?
வானத்திலிருந்து (ஆதி. 22 : 11)

15. ஆபிரகாம் ஈசாக்குக்குப் பதிலாக என்ன பலியிட்டான்?
புதரிலே தன் கொம்புகள் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக் கடாவை பிடித்துக் கொண்டு வந்து பலியிட்டான். (ஆதி 22 : 13)

16. தேவன் ஆபிரகாமை சோதித்த பின்பு, அவனைக் குறித்து கொடுத்த சாட்சி என்ன?
தேவனுக்கு பயப்படுகிறவன். (ஆதி. 22 : 12)

17. ஈசாக்குக்கு பதிலாக ஆட்டுக்கடாவை பலியிட்ட இடத்திற்கு ஆபிரகாம் என்ன பேரிட்டான்?
யேகோவாயீரே (ஆதி. 22 : 14)

18. யேகோவாயீரே என்றால் அர்த்தம் என்ன?
கர்த்தர் பார்த்துக் கொள்வார். (பாடத்திட்டம்)

## IV <u>ஒரு வாக்கியத்தில் விடையளி</u> : (2 Marks)

1. தேவன் ஆபிரகாமை சோதிக்கும்படி அவனிடத்தில் என்ன சொன்னார்?
தேவன் ஆபிரகாமிடம் உன் புத்திரனும், உன் ஏகசுதனம் , உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை தகனபலியாக பலியிடு என்றார். (ஆதி. 22 : 2)

2. ஆபிரகாம் ஈசாக்கை பலியிடும்படி போகும்போது தன் வேலைக்காரரிடம் சொன்ன விசுவாசத்தின் வார்த்தைகள் யாவை?
ஆபிரகாம் தன் வேலைக்காரரிடம் நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள். நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுது கொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்றான். (ஆதி 22 : 5)

3. ஆபிரகாம் பலி செலுத்தச் போகும் போது என்ன எடுத்துக் கொண்டு போன்னான்?
தகனபலிக்குக் கட்டைகளையும் நெருப்பையும், கத்தியையும் எடுத்துக் கொண்டு தன் குமாரனாகிய ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு போனான். (ஆதி. 22 : 6)

4. ஆபிரகாம் ஈசாக்கு இருவரும் பலியிடும்படி போகும்போது, ஈசாக்கு ஆபிரகாமிடம் என்ன கேட்டான்?
ஈசாக்கு ஆபிரகாமிடம், இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்று கேட்டான். (ஆதி 22 : 7)

5. தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பற்றி ஈசாக்கு வினவிய போது ஆபிரகாம் அவனுக்கு என்ன பதிலுரைத்தான்?
ஆபிரகாம், என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக் குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான். (ஆதி. 22 : 8)

6. ஈசாக்கை பலியிடும்படி தேவன் குறித்திருந்த இடத்திற்கு சென்றவுடன் ஆபிரகாம் என்ன செய்தான்?
ஆபிரகாம், ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கை கட்டி கட்டைகளின்மேல் கிடத்தினான். (ஆதி. 22 : 9)

7. ஆபிரகாம் ஈசாக்கை வெட்டும்படி கத்தியை எடுத்த போது, கர்த்தருடைய தூதனானவர் அவனைக் கூப்பிட்டு என்ன சொன்னார்?
கர்த்தருடைய தூதனானவர் ஆபிரகாமை கூப்பிட்டு, பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே. அவனுக்கு ஒன்றும் செய்யாதே, நீ அவனை உன் புத்திரன் என்றும் உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிவேன் என்றான். (ஆதி . 22 : 12)

***************

# ஏசா சேஷ்டபுத்திரபாகத்தை இழந்தது

(ஆதியாகமம் 25 : 21 - 34)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

வெளிப்படுத்தின விசேஷம் 3 : 11

இதோ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு.

**II** *போதனை :* (2 Marks)

நாம் இவ்வுலக சிற்றின்பங்களை விரும்பி மேன்மையான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இழந்து போகக் கூடாது.

**III** *ஓரிரு வார்த்தையில் விடையளி :* (1 Mark)

**1.** ஈசாக்கின் மனைவி யார்?
ரெபெக்காள் (ஆதி. 25 : 21)

**2.** மலடியாயிருந்த ரெபெக்காளுக்காக கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தது யார்?
ஈசாக்கு (ஆதி 25 : 21)

**3.** ரெபெக்காளுக்கு எத்தனை பிள்ளைகள் பிறந்தனர்?
இரட்டைப் பிள்ளைகள் (ஆதி. 25 : 24)

**4.** ஏசா யாருக்குப் பிரியமானவனாயிருந்தான்?
ஏசா தன் தகப்பனுக்குப் பிரியமானவனாயிருந்தான். (ஆதி. 25 : 28)

**5.** யாக்கோபு யாருக்குப் பிரியமானவனாயிருந்தான்?
யாக்கோபு தன் தாய்க்குப் பிரியமானவானாயிருந்தான். (ஆதி 25 : 28)

**6.** யாக்கோபு என்ன சமைத்துக் கொண்டிருந்தான்?
சிவப்பான கூழ் (ஆதி. 25 : 29)

**7.** ஏசாவின் மறுபெயர் என்ன?
ஏதோம் (ஆதி. 25 : 30)

**8.** ஏசா தன் பசியை ஆற்றிக் கொள்ளும்படி யாக்கோபிடம் என்ன கேட்டான்?
சிவப்பான கூழ் (ஆதி. 25 : 30)

**9.** யாக்கோபு சிவப்பான கூழுக்கு விலைக்கிரயமாக ஏசாவிடம் என்ன கேட்டான்?
ஏசாவின் சேஷ்டபுத்திர பாகத்தைக் கேட்டான் (ஆதி. 25 : 31)

**10.** ஒரு வேளை போஜனத்திற்காக தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப் போட்டது யார்? (அல்லது) தன் பசியைஆற்றிக் கொள்ளும்படி தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை அலட்சியம் செய்தது யார்?
ஏசா (ஆதி. 25 : 33, 34)

**IV** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** கர்த்தர் ஈசாக்கின் பிள்ளைகளைக் குறித்து அவர்களுக்கு கொடுத்த வெளிப்படுத்தல் என்ன?
கர்த்தர் ரெபெக்காளிடம் ,
1) இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது.
2) இரண்டு வித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும்

3) அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப் பார்க்கிலும் பலத்திருப்பார்கள்.
4) மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றார். (ஆதி. 25 : 23)

**2.** ஈசாக்கின் மூத்தமகன் யார்? அவன் எப்படிப்பட்டவனாயிருந்தான்?
1) ஏசா 2) அவன் வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாயிருந்தான்(ஆதி 25:27)

**3.** ஈசாக்கின் இளையமகன் யார்? அவன் எப்படிப்பட்டவனாயிருந்தான் ?
1) யாக்கோபு 2) அவன் குணசாலியும் கூடாரவாசியுமாயிருந்தான். (ஆதி 25 : 27)

**4.** ஏசாவுக்கு ஏதோம் என்கிற பேர் ஏன் உண்டாயிற்று?
ஏசா வெளியிலிருந்து களைத்து வந்தபோது, யாக்கோபு கூழ் சமைத்துக் கொண்டிருந்தான். ஏசா யாக்கோபை நோக்கி, “அந்தச் சிவப்பான கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா, இளைத்திருக்கிறேன்” என்றான். இதனாலே அவனுக்கு ஏதோம் என்கிற பேர் உண்டாயிற்று.. (ஆதி. 25 : 29 - 30)

**5.** யாக்கோபு ஏசாவுடைய சேஷ்டபுத்திர பாகத்தை கேட்டபொழுது , ஏசா அவனிடம் என்ன சொன்னான்?
ஏசா, “இதோ நான் சாகப் போகிறேனே , இந்தச் சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு” என்றான். (ஆதி. 25 : 32)

**************

.

வகுப்பு : 2

பாடம்-5

# யாக்கோபு கண்ட சொப்பனம்

(ஆதியாகமம் 28 : 10 – 19)

**I** *<u>மனப்பாட வசனம் :</u>* (2 Marks)

<u>சங்கீதம் 27 : 10</u>

என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும் , கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார்.

**II** *<u>போதனை</u>* : (2 Marks)

நமக்கு உதவு செய்ய ஒருவரும் இல்லாமல் நாம் தனிமையாயிருக்கும்போது தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நமக்கு அளித்து நம்மைத் தேற்றுகிறார்.

**III** *<u>ஓரிரு வார்த்தையில் விடையளி</u>* : (1 Mark)

**1.** யாக்கோபு ஏசாவுக்கு பயந்து எங்கே போனான்?
ஆரானுக்குப் போனான் (ஆதி. 28 : 10)

**2.** யாக்கோபு யாருடைய ஆலோசனைக்குக் கீழ்படிந்து பெயெர்செபாவை விட்டு ஆரானுக்குப் போனான்?
தாயினுடைய ஆலோசனை (ஆதி 28 : 10)

**3.** யாக்கோபு ஏணி எங்கே வைத்திருப்பதாக சொப்பனம் கண்டான்?
பூமியில் (ஆதி. 28 : 12)

**4.** யாக்கோபு சொப்பனத்தில் கண்ட ஏணியின் நுனி எதை எட்டியிருந்தது?
வானத்தை (ஆதி. 28 : 12)

**5.** யாக்கோபு சொப்பனத்தில் கண்ட ஏணியில் யார் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்?
தேவ தூதர்கள் (ஆதி 28 : 12)

**6.** யாக்கோபு சொப்பனத்தில் கண்ட ஏணியின் மேலாக நின்றது யார்?
கர்த்தர் (ஆதி. 28 : 13)

**7.** யாக்கோபு கர்த்தரை தரிசித்த இடத்திற்கு என்ன பெயரிட்டான்?
பெத்தேல் (ஆதி. 28: 19)

**8.** பெத்தேலின் பழைய பெயர் என்ன?
லூஸ் (ஆதி. 28 : 19)

**9.** பெத்தேல் என்பதின் பொருள் யாது?
தேவனுடைய வீடு (பாடத்திட்டம்)

**IV** *<u>ஓரிரு வாக்கிய□களில் விடையளி</u>* : (2 Marks)

**1.** யாக்கோபு ஆரானுக்குப் போகும் வழியில் சூரியன் அஸ்தமித்தபோது என்ன செய்தான்?
சூரியன் அஸ்தமித்தபோது, அவன் அவ்விடத்துக்கற்களில் ஒன்றை எடுத்து அதைத் தன் தலையின் கீழ் வைத்து படுத்து நித்திரை செய்தான். (ஆதி 28 : 11)

2. யாக்கோபு கண்ட சொப்பனம் என்ன?

யாக்கோபு ஒரு சொப்பனம் கண்டான். ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். (ஆதி. 28 : 12)

3. கர்த்தர் யாக்கோபின் சொப்பனத்தில் தோன்றி கூறிய வாக்குத்தத்தங்கள் என்ன? (அல்லது) கர்த்தர் யாக்கோபின் சொப்பனத்தில் தோன்றி கூறிய ஏதேனும் நான்கு வாக்குத்தத்தங்களை கூறு.

கர்த்தர் யாக்கோபிடம் ,

1) நான் உன் முற்பிதாக்களின் தேவன்
2) நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்
3) உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்.
4) உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.
5) நான் உன்னோடே இருந்து நீ போகிற இடமெல்லாம் உன்னை காத்து இந்த தேசத்துக்கு திரும்பி வரப்பண்ணுவேன்,
6) இதைச் செய்யுமளவும் உன்னை கைவிடுவதில்லை என்றார், (ஆதி. 28 : 13 - 15)

4. யாக்கோபு சொப்பனம் கண்டு நித்திரை தெளிந்து விழித்த போது என்ன சொன்னான்?

1) யாக்கோபு , மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன்.
2) இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது.
3) இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல.
4) இது வானத்தின் வாசல் என்றான். (ஆதி. 28 : 16 - 17)

5. யாக்கோபு அதிகாலையில் எழுந்து என்ன செய்தான்?

யாக்கோபு தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெய் வார்த்து அந்த இடத்திற்கு பெத்தேல் என்று பேரிட்டான் (ஆதி.28 : 18, 19)

***************

# யாக்கோபு தேவதூதனோடு போராடியது

(ஆதியாகமம் 27 : 36 ; 32)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

எரேமியா 29 : 13

உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.

**II** *போதனை* : (2 Marks)

யாக்கோபு தேவதூதனோடு போராடினது, ஜெபத்தில் போராடுவதைக் காட்டுகிறது. நாம் தேவ சமூகத்தில் கருத்தாய் ஜெபித்து அவரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**III** *ஓரிரு வார்த்தையில் விடையளி* : (1 Mark)

**1.** ஏசா யாரைப் பகைத்தான்?
யாக்கோபைப் பகைத்தான் (ஆதி. 27 : 36)

**2.** ஏசா எத்தனை மனிதரோடுகூட யாக்கோபை சந்திக்கும்படி வந்தான்?
நானூறு (ஆதி 32 : 6)

**3.** ஏசா நானூறு மனிதரோடு தன்னை சந்திக்கும்படி வருகிறான் என்று கேட்ட பொழுது யாக்கோபு என்ன செய்தான்?
யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, கர்த்தரிடம் ஜெபித்தான்(ஆதி. 32 : 7,11)

**4.** ஏசாவை சாந்தப்படுத்தும்படி யாக்கோபு என்ன செய்தான்?
வெகுமதிகளை அனுப்பினான் (ஆதி. 32 : 18)

**5.** யாக்கோபு தன் மனைவிகளையும் குமாரரையும எந்த ஆற்றின் துறையைக் கடக்கச் செய்தான்?
யாப்போக்கு (ஆதி 32 : 22)

**6.** யாக்கோபை யாரால் மேற்கொள்ள முடியவில்லை?
தூதனால் (ஆதி. 32 : 25)

**7.** தூதன் தன்னைப் போகவிடும்படி யாக்கோபிடம் கேட்ட பொழுது அவன் என்ன சொன்னான்?
நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் (ஆதி. 32 : 26)

**8.** தூதனால் யாக்கோபை மேற்கொள்ள முடியாமற்போன போது தூதன் என்ன செய்தான்?
யாக்கோபின் தொடைச் சந்தைத் தொட்டார். அவனுடைய தொடைச் சந்து சுளுக்கிற்று (ஆதி. 32 : 25)

**9.** தூதன் யாக்கோபை எப்படி ஆசீர்வதித்தார்?
யாக்கோபின் பெயரை இஸ்ரவேல் என்ற மாற்றி அவனை ஆசீர்வதித்தார்.(ஆதி.32:28)

**10.** இஸ்ரவேல் என்பதின் பொருள் யாது?
தேவனுடைய பிரபு (பாடத்திட்டம்)

**11.** தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டது யார்?
யாக்கோபு (ஆதி 32 : 28)

**12.** யாக்கோபு தேவனை முகமுகமாய் கண்டேன் என்று சொல்லி அந்த இடத்திற்கு என்ன பெயரிட்டான்?
பெனியேல் (ஆதி 32 : 30)

**13.** யாக்கோபு தன் தகப்பன் வீட்டை விட்டுப் புறப்பட்டு போனபோது, சூரியன் எந்த இடத்தில் அஸ்தமித்தது? எங்கு உதயமாயிற்று?
1) பெத்தேல் (ஆதி. 28 : 11)
2) பெனியேல் (ஆதி. 32 : 31)

**IV** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி*** : (2 Marks)

**1.** ஏசா யாக்கோபை ஏன் பகைத்தான்?
1) யாக்கோபு, ஏசாவை வஞ்சித்து அவனுடைய சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்டான்.
2) யாக்கோபு, வஞ்சகமாயத் தன் தகப்பனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். ஆகையால் ஏசா யாக்கோபைப் பகைத்தான். (ஆதி. 27 : 36)

**2.** யாக்கோபு ஏசாவின் கையிலிருந்து தன்னை விடுதலையாக்கும்படி எவ்வாறு ஜெபித்தான்?
யாக்கோபு, “என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும். அவனுக்கு நான் பயந்திருக்கிறேன்.
தேவரீரோ, நான் உனக்கு நன்மை செய்து உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல பெருகப் பண்ணுவேன் என்று சொன்னீரே” என்று ஜெபித்தான். (ஆதி 32 : 11, 12).

**3.** ஏசாவை சாந்தப்படுத்தும்படி யாக்கோபு அவனுக்கு அனுப்பின வெகுமதிகள் யாவை?
யாக்கோபு வெள்ளாடுகளையும், வெள்ளாட்டுக்கடாக்களையும், செம்மறியாடுகளையும், ஆட்டுக்கடாக்களையும், ஒட்டகங்களையும் , அவைகளின் குட்டிகளையும் , கடாரிகளையும், காளைகளையும், கோளிக்கைக் கழுதைகளையும், கழுதைக்குட்டிகளையும் வெகுமதிகளாக அனுப்பினான். (ஆதி 32 : 13 - 15)

**4.** யாக்கோபு தனக்குண்டான யாவையும் அக்கரைப்படுத்தின பின்பு என்ன செய்தான்?
யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான். அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடினான். (ஆதி 32 : 24)

**5.** யாக்கோபு தேவதூதனோடு எவ்வாறு போராடினான்?
a. யாக்கோபு தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்தி விட்டு பிந்தித் தனித்திருந்தான்.
b. அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடினான்
c. அவனை மேற்கொள்ளாததைக் கண்டு அவனுடைய தொடைச் சந்தை தொட்டார்.
d. தூதன் யாக்கோபிடம் தன்னைப் போகவிடும்படி கேட்டார். அதற்கு யாக்கோபு, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான்.
e. தேவ தூதன் அவனுடைய பெயரை இஸ்ரவேல் என்று மாற்றி அவனை ஆசீர்வதித்தார். (ஆதி. 32 : 24 - 29)

***************

வகுப்பு : 2

பாடம்-7

# யோசேப்பின் இரு சொப்பனங்கள்

(ஆதியாகமம் 37 : 1 - 11)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 25 : 14

கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.

**II** *போதனை :* (2 Marks)

நாம் பாவத்தை வெறுத்து, தேவனுக்குப் பிரியமாய் ஜீவிப்போமானால், அவர் நம்மை ஆசீர்வதித்து, நம்மைக் குறித்த தம்முடைய மகத்தான திட்டத்தை நமக்கு வெளிப்படுத்துவார்.

**III** *ஓரிரு வார்த்தையில் விடையளி :* (1 Mark)

1. யாக்கோபுக்கு எத்தனை குமாரர் இருந்தனர்?
   பன்னிரண்டு குமாரர்
2. இஸ்ரவேல் (யாக்கோபு) தன் குமாரர் எல்லாரிலும் யாரை அதிகமாய் நேசித்தான்? ஏன்?
   1) யோசேப்பை அதிகமாய் நேசித்தான்.
   2) ஏனெனில் அவனுடைய முதிர்வயதிலே யோசேப்பு அவனுக்குப் பிறந்தான்.(ஆதி37:3)
3. யாக்கோபு யோசேப்பை அதிகமாய் நேசித்தபடியினால் அவனுக்கு என்ன செய்வித்தான்?
   பலவருணமான அங்கியை செய்வித்தான். (ஆதி. 37 : 3)
4. யோசேப்பு யாருடைய துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்குச் சொல்லி வந்தான்?
   தன் சகோதரர்களுடைய துன்மார்க்கத்தை சொல்லி வந்தான். (ஆதி. 37 : 2)
5. யாருடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது?
   யோசேப்புடைய அரிக்கட்டு (ஆதி 37 : 7)
6. யாருடைய அரிக்கட்டுகள் யோசேப்புடைய அரிக்கட்டுகளை சுற்றி வணங்கி நின்றது?
   யோசேப்புடைய சகோதரர்களின் அரிக்கட்டுகள் (ஆதி 37 : 7)
7. யோசேப்பின் சொப்பனத்தை கேட்டு அவனை அதிகமாய் பகைத்தது யார்? அவனைக் கடிந்து கொண்டது யார்?
   1) அவனுடைய சகோதரர் (ஆதி 37 : 8)
   2) அவனுடைய தகப்பன் (ஆதி. 37 : 10)
8. யோசேப்பின் சொப்பனத்தைக் கேட்டு அவன்மேல் பொறாமை கொண்டவர்கள் யார்? அதை தன் மனதிலே வைத்துக் கொண்டது யார்?
   1) அவனுடைய சகோதரர் .
   2) அவனுடைய தகப்பன் (ஆதி. 37 : 11)

**IV** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. யோசேப்பு கண்ட முதலாவது சொப்பனம் என்ன?
   யோசேப்பும் அவன் சகோதரரும் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது யோசேப்பினுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது. அவனுடைய சகோதரரின் அரிக்கட்டுகள் அவனுடைய அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்று சொப்பனம் கண்டான். (ஆதி. 37 : 7)
2. யோசேப்பு கண்ட இரண்டாவது சொப்பனம் என்ன?
   யோசேப்பு, சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்கினதாகச் சொப்பனம் கண்டான். (ஆதி. 37 : 9)

**3.** யோசேப்பின் இரண்டாவது சொப்பனத்தைக் கேட்டபோது அவன் தகப்பன் என்ன செய்தான்?

யோசேப்பின் தகப்பன், "நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமோ?" என்று அவனைக் கடிந்து கொண்டான். (ஆதி. 37 : 10)

**4.** யோசிப்பின் சகோதரர் அவனை ஏன் பகைத்தார்கள்?

*i)* தகப்பன் யோசேப்பின் சகோதரர் எல்லாரையும் காட்டிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்தபடியாலும்

*ii)* யோசேப்பின் சொப்பனங்களின் நிமித்தமும்

*iii)* அவன் வார்த்தைகளின் நிமித்தமும், யோசேப்பின் சகோதரர் அவனை பகைத்தார்கள். (ஆதி. 37 : 3, 5, 8)

************

வகுப்பு : 2

பாடம்-8

# சிறைச்சாலையில் யோசேப்பு

(ஆதியாகமம் 37 : 13 - 36 ; 39 : 40)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ஏசாயா 26 : 3

உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.

**II** *போதனை :* (2 Marks)

நாம் தேவனுக்குப் பயந்து ஜீவித்தால், நாம் எங்கிருந்தாலும், தேவன் நம்முடனே கூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பார்.

**III** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (1 Mark)

**1.** யோசேப்பு யாரைப் பார்த்துவரும்படி தன் தகப்பனால் அனுப்பப்பட்டான்?
தன் சகோதரரைப் பார்த்துவரும்படியாக அனுப்பப்பட்டான். (ஆதி. 37 : 14)

**2.** யோசேப்பு தன் சகோதரரைப் பார்க்கும்படியாகப் போன போது, அவர்கள் அவனை என்ன செய்தார்கள்?
தண்ணீரில்லாத வெறுங்குழியில் போட்டார்கள். (ஆதி 37 : 24)

**3.** யோசேப்பின் சகோதரர் அவனை யாருக்கு விற்றுப்போட்டார்கள்?
இஸ்மவேலருக்கு விற்றுப்போட்டார்கள் (ஆதி. 37 : 25)

**4.** யோசேப்போடேகூட சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த வேறு இரண்டு முக்கிய நபர்கள் யார்?
**a.** ராஜாவின் பானபாத்திரக்காரரின் தலைவன்
**b.** சுயம்பாகிகளின் தலைவன் (ஆதி. 40 : 2)

**5.** பானபாத்திரக்காரன் கண்ட சொப்பனத்தில் எத்தனை திராட்சக்கொடிகள் இருந்தது?
மூன்று (ஆதி 40 : 10)

**6.** சுயம்பாகிகளின் தலைவனும் பானபாத்திரக்காரரின் தலைவனும் கண்ட சொப்பனத்தின் அர்த்தத்தை அவர்களுக்கு சொன்னது யார்?
யோசேப்பு (ஆதி. 40 : 12,13,18,19)

**7.** பானபாத்திரக்காரரின் தலைவனும் சுயம்பாகிகளின் தலைவனும் கண்ட சொப்பனம் எப்போது நிறைவேறிற்று?
மூன்றாம் நாள் (ஆதி. 40 : 20)

**8.** பார்வோனுடைய ஜன்மநாளன்று, பார்வோன் யாரை உயர்த்தினான்? யாரைத் தூக்கிப்போட்டான்?
**a.** பானபாத்திரக்காரரின் தலைவனை உயர்த்தினான்.
**b.** சுயம்பாகிகளின் தலைவனை தூக்கிப்போட்டான். (ஆதி. 40 : 21,22)

**9.** யோசேப்பு சொப்பனத்திற்கு சொன்ன அர்த்தத்தின்படியே சம்பவித்தபோது, பானபாத்திரக்காரன் என்ன செய்தான்?
யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டான். (ஆதி. 40 : 23)

**IV** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி*** : (2 Marks)

1. இஸ்மவேலர் யோசேப்பை எங்கு கொண்டு போனார்கள்? யாருக்கு விற்றுப்போட்டார்கள்?
   - a. எகிப்துக்கு கொண்டுபோனார்கள்
   - b. பார்வோனுடை.ய பிரதானியாயிருந்த போத்திபார் என்பவனுக்கு விற்றுப்போட்டார்கள். (ஆதி. 37 : 36)

2. யோசேப்பு சிறைச்சாலையிலிருந்தபோது கர்த்தர் என்ன செய்தார்?
   கர்த்தர் யோசேப்போடே இருந்து, அவன் மேல் கிருபை வைத்து, அவன் செய்ததையெல்லாம் வாய்க்கச் செய்தார். (ஆதி 39 : 21,23)

3. சிறைச்சாலைத் தலைவன் யோசேப்பின் வசமாயிருந்த யாதொன்றைக்குறித்தும் ஏன் விசாரிக்கவில்லை?
   - a. கர்த்தர் யோசேப்போடே இருந்தபடியினாலும்,
   - b. அவன் எதைச்செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும், அவன் வசமாயிருந்த யாதொன்றைக்குறித்தும் விசாரிக்கவில்லை. (ஆதி. 39 : 23)

4. பானபாத்திரக்காரரின் தலைவன் கண்ட சொப்பனம் என்ன?
   பானபாத்திரக்காரன் யோசேப்பிடம், " என் சொப்பனத்திலே ஒரு திராட்சக் கொடி இருந்தது. அதில் மூன்று கொடிகள் இருந்தது. அது துளிர்க்கிறதாகவும் குலைகள் பழுத்ததாயுமிருந்தது. நான் அவைகளைபறித்து பார்வோனுடைய பாத்திரத்தில் பிழிந்து அவருக்கு கொடுத்தேன்'' என்றான். (ஆதி. 40 :9-11)

5. யோசேப்பு பானபாத்திரக்காரரின் தலைவனுடைய சொப்பனத்திற்கு சொன்ன அர்த்தம் என்ன?
   யோசேப்பு பானபாத்திரக்காரரின் தலைவனிடம், "மூன்று கொடிகளும் மூன்று நாளாம். மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மறுபடியும் உன் நிலையிலே நிறுத்துவார்'' என்றான். (ஆதி 40 : 12,13)

6. யோசேப்பு பானபாத்திரக்காரரின் தலைவனிடம் வேண்டிக்கொண்டது என்ன?
   யோசேப்பு பானபாத்திரக்காரரின் தலைவனிடம், "நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவு வைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும்'' என்றான். (ஆதி. 40 : 14)

7. சுயம்பாகிகளின் தலைவன் கண்ட சொப்பனம் என்ன?
   சுயம்பாகிகளின் தலைவன் யோசேப்பிடம், "என் சொப்பனத்திலே மூன்று வெள்ளைக் கூடைகள் என் தலையின் மேல் இருக்கக்கண்டேன். மேற்கூடையில் பார்வோனுக்காக சமைக்கப்பட்ட பலகாரங்கள் கொஞ்சம் இருந்தது. பறவைகள் வந்து அவைகளை பட்சித்தது'' என்றான். (ஆதி. 41 : 16,17)

8. யோசேப்பு சுயம்பாகிகளின் தலைவனுடைய சொப்பனத்திற்கு சொன்ன அர்த்தம் என்ன?
   யோசேப்பு சுயம்பாகிகளின் தலைவனிடம், "மூன்று கூடைகளும் மூன்று நாளாம். மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார். உன் மாம்சத்தை பறவைகள் தின்னும்'' என்றான். (ஆதி. 41 : 18,19)

***************

# எகிப்தில் யோசேப்பு (பகுதி I)

(ஆதியாகமம் 41 : 1 - 44)

**I.** *<u>மனப்பாட வசனம்</u>* : (2 Marks)

**I** <u>பேதுரு 5 : 6</u>

ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

**II.** *<u>போதனை</u>* : (2 Marks)

யோசப்பு தான் வைக்கப்பட்ட எந்த இடத்திலும் உண்மையுள்ளவனாயிருந்தான். எனவே அவன் சிறைச்சாலையிலிருந்து அரண்மனைக்கு உயர்த்தப்பட்டான். நாமும் அவனைப் போல் இருப்போமாயின், கர்த்தரால் ஏற்ற காலத்தில் உயர்த்தப்படுவோம்.

**III.** *<u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி</u>* : (1 Mark)

**1.** முதலாவது நதியிலிருந்து ஏறிவந்த பசுக்கள் எப்படிப்பட்டதாயிருந்தது?
அழகும் புஷ்டியுமாயிருந்தது. (ஆதி. 41 : 2)

**2.** இரண்டவது நதியிலிருந்து ஏறிவந்.த பசுக்கள் எப்படிப்பட்டதாயிருந்தது?
அவலட்சணமும் கேவலமுமாயிருந்தது. (ஆதி 41 : 3)

**3.** அழகும் புஷ்டியுமான பசுக்களை பட்சித்துப் போட்டது எது?
அவலட்சணமும் கேவலமுமான பசுக்கள். (ஆதி 41 : 4)

**4.** முதலாவது வளர்ந்த கதிர்கள் எப்படியிருந்தது?
நல்ல செழுமையான கதிர்கள் (ஆதி. 41 : 5)

**5.** இரண்டாவது வளர்ந்த கதிர்கள் எப்படியிருந்தது?
சாவியானதும் கீழ்காற்றினால் தீய்ந்ததுமாயிருந்தது. (ஆதி 41 : 6)

**6.** செழுமையும் நிறைமேனியுமான கதிர்களை விழுங்கிப் போட்டது எது?
சாவியான கதிர்கள். (ஆதி. 41 : 7)

**7.** பார்வோனுக்கு யோசேப்பைக் குறித்து அறிவித்தது யார்?
பானபாத்திரக்காரரின் தலைவன் (ஆதி. 41 : 9)

**8.** பார்வோன் கண்ட சொப்பனங்களின் அர்த்தத்தை அவனுக்கு சொன்னது யார்?
யோசேப்பு (ஆதி. 41 : 25)

**9.** பார்வோன் சொப்பனத்தில் கண்ட ஏழுநல்ல பசுக்களும் ஏழு நல்ல கதிர்களும் எதைக் குறிக்கிறது?
எகிப்து தேசமெங்கும் பரிபூரணமான விளைவு உண்டாயிருக்கும் ஏழு வருஷங்களைக் குறிக்கிறது. (ஆதி. 41 : 29)

**10.** பார்வோன் சொப்பனத்தில் கண்ட ஏழு அவலட்சணமான பசுக்களும் ஏழு சாவியான கதிர்களும் எதைக் குறிக்கிறது?
எகிப்து தேசமெங்கும் பஞ்சமுண்டாயிருக்கும் ஏழு வருஷங்களைக் குறித்தது (ஆதி 41:30)

**11.** பார்வோன் யோசேப்பைக் குறித்து கூறிய சாட்சி என்ன?
தேவ ஆவியைப் பெற்ற விவேகமும் ஞானமுமுள்ளவன். (ஆதி. 41 : 38,39

## IV. ஓரிரு வாக்கிய□களில் விடையளி : (2 Marks)

**1.** பார்வோன் கண்ட முதலாவது சொப்பனம் என்ன?

பார்வோன் நதியண்டையிலே நின்று கொண்டிருந்தான். அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து புல் மேய்ந்தது. அவைகளின் பின் அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் ஏறிவந்து புஷ்டியான பசுக்களை பட்சித்துப்போட்டது. (ஆதி. 41 : 1-4)

**2.** பார்வோன் கண்ட இரண்டாவது சொப்பனம் என்ன?

நல்ல செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்தது. பின்பு சாவியானதும் கீழ்காற்றினால் தீய்ந்ததுமான ஏழு கதிர்கள் முளைத்து செழுமையான கதிர்களை விழுங்கிப்போட்டது. (ஆதி 41 : 5-7)

**3.** யோசேப்பு பார்வோன் கண்ட சொப்பனத்திற்கு சொன்ன அர்த்தம் என்ன?

யோசேப்பு பார்வோனிடம், "ஏழு நல்ல பசுக்களும் ஏழு நல்ல கதிர்களும் எகிப்து தேசமெங்கும் பரிபூரணமான விளைவு உண்டாயிருக்கும் ஏழு வருஷத்தைக்குறிக்கிறது. கேவலமான ஏழு பசுக்களும் சாவியான ஏழு கதிர்களும் பஞ்சமுண்டாகும் ஏழு வருஷங்களைக் குறிக்கிறது. வரப்போகிற பஞ்சத்தால் தேசத்தில் முன்னிருந்த பரிபூரணமெல்லாம் ஒழிந்து போகும்" என்றான். (ஆதி. 41 : 25,32)

**4.** பார்வோன் யோசேப்பை எவ்வாறு உயர்த்தினான்?

பார்வோன் யோசேப்பிடம், "நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய், உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள். சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன்" என்று அவனை உயர்த்தினான். (ஆதி 41 : 40)

***************

வகுப்பு : 2

பாடம்-10

# எகிப்தில் யோசேப்பு (பகுதி II)

(ஆதியாகமம் 41 : 40 - 57 ; 42 ; 43 : 15 ;
44 : 2-13 ; 45 : 1-4 ; 46 : 5, 6 ; 47 : 12))

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ரோமர் 12 : 21

நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.

**II** *போதனை* : (2 Marks)

யோசேப்பு உயர்த்தப்பட்டபோதிலும் தீமைக்குத் தீமை செய்யாமல் தன் சகோதரருக்கு நன்மை செய்தான். நாமும் அவ்வண்ணமாகவே செய்து தேவனுடைய சுபாவத்தை வெளிப்படுத்த வேண்டும்.

**III** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

**1.** பார்வோன் எகிப்து தேசம் முழுவதற்கும் யாரை அதிகாரியாக்கினான்?
யோசேப்பு (ஆதி. 41 : 41)

**2.** பஞ்சமுள்ள வருஷங்களுக்கென்று தானியங்களை சேர்த்து வைத்தது யார்?
யோசேப்பு (ஆதி 41 : 48)

**3.** பஞ்சமுள்ள வருஷங்களுக்கென்று யோசேப்பு எவ்வளவு தானியங்களை சேர்த்து வைத்தான்?
அளவிறந்ததாய்க் கடற்கரைமணலைப்போல மிகுதியாகத் தானியத்தை சேர்த்து வைத்தான். (ஆதி 41 : 49)

**4.** பஞ்சம் உண்டானபோது யோசேப்பின் சகோதரர் தானியம் வாங்கும்படி எங்கு போனார்கள்?
எகிப்துக்கு போனார்கள். (ஆதி. 42 : 3)

**5.** யோசேப்பு தன் சகோதரரை சந்தித்தவுடன் அவர்களை யார் என்று சொன்னான்?
வேவுக்காரா. (ஆதி 42 : 9)

**6.** யோசேப்பு தன் சகோதரரில் யாரைப் பிடித்து கட்டி வைத்தான்?
சிமியோனைக் கட்டி வைத்தான். (ஆதி. 43 : 23)

**7.** யோசேப்பின் சகோதரர் இரண்டாம் முறை எகிப்துக்குச் செல்லும்போது யாரை தங்களுடன் கூட்டிக் கொண்டு சென்றார்கள்?
பென்யமீனைக் கூட்டிக்கொண்டு சென்றார்கள். (ஆதி. 43 : 15)

**8.** யோசேப்பு பானம் பண்ணும் வெள்ளிப் பாத்திரம் யாருடைய சாக்கிலே இருந்தது?
பென்யமீனுடைய சாக்கிலே இருந்தது. (ஆதி. 44 : 12)

**9.** பென்யமீனுடைய சாக்கிலே வெள்ளிப்பாத்திரத்தை கண்டுபிடித்தபோது அவனுடைய சகோதரர்கள் என்ன செய்தார்கள்?
அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, பட்டணத்திற்குத் திரும்பிப்போனார்கள். (ஆதி. 44 : 13)

**10.** பென்யமீனுக்காக யோசேப்பிடம் பரிந்து பேசியது யார்?
யூதா (ஆதி. 45 : 34)

**11.** யாக்கோபும் அவன் குடும்பத்தாரும் பெயர்செபாவிலிருந்து எங்கே போனார்கள்?
எகிப்து (ஆதி. 46 : 5, 6)

**12.** எகிப்து தேசத்தில் யாக்கோபுக்கும் அவன் குடும்பத்தார் அனைவருக்கும் ஆகாரம் கொடுத்து ஆதரித்து வந்தது யார்?
யோசேப்பு (ஆதி. 47 : 12)

**IIII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி*** : (2 Marks)

**1.** பார்வோன் யோசேப்பை எகிப்து தேசம் முழுமைக்கும் எவ்வாறு அதிகாரியாக்கினான்?
பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே பொட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து. தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்து தேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான். (ஆதி. 41 : 42,43)

**2.** யோசேப்பு தன்னைத் தன் சகோதரருக்கு வெளிப்படுத்தின விதத்தை விவரி?
யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை வெளிப்படுத்துகையில், ஒருவரும் அவன் அருகில் நிற்கவில்லை. அவன் சத்தமிட்டு அழுது, "நான் யோசேப்பு என் தகப்பனார் இன்னும் உயிரோடே இருக்கிறாரா" என்றான். பின்பு அவன் அவர்களிடம், "என் கிட்ட வாருங்கள் நீங்கள் விற்றுப்போட்ட யோசேப்பு நான்தான்" என்று சொல்லி தன்னை வெளிப்படுத்தினான். (ஆதி 45:1-4)

***************

வகுப்பு : 2

பாடம்-11

# முப்பத்தெட்டு வருடங்களாக வியாதியாயிருந்த மனுஷன் சுகமாக்கப்பட்டது

(யோவான் 5 : 1 - 9))

**I.** *மனப்பாட வசனம்* : (2 Marks)

சங்கீதம் 34 : 6

இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.

**II.** *போதனை* : (2 Marks)

நாம் சுகமாக்கப்பட வேண்டுமென்று விரும்பி, உதவிக்காக கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பார்க்கும்போது, அவர் நம்மைச் சுகமாக்குகிறார்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. பெதஸ்தா குளம் எங்கே இருக்கிறது?
   எருசலேமில் ஆட்டுவாசலினருகே இருக்கிறது. (யோவான் 5 : 2)
2. பெதஸ்தா குளத்திற்கு எத்தனை மண்டபங்களிலிருக்கிறது?
   ஐந்து (யோவான் 5 : 2)
3. வியாதியஸ்தர் சுகமடையும்படி எந்தக் குளத்தினருகே காத்துக்கொண்டிருந்தார்கள்?
   பெதஸ்தா ( யோவான் 5 : 2,3)
4. பெதஸ்தா குளத்தின் தண்ணீரை யார் கலக்குவார்கள்?
   ஒரு தேவதூதன் (யோவான் 5 : 4)
5. பெதஸ்தா குளத்தினருகே இயேசு சந்தித்த மனுஷன் எத்தனை வருஷம் வியாதியாயிருந்தான்?
   முப்பத்தெட்டு வருஷம். (யோவான் 5 : 5)
6. முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த மனுஷனிடம் இயேசு என்ன கேட்டார்?
   சொஸ்தமாகவேண்டும்மென்று விரும்புகிறாயா என்று கேட்டார். (யோவான் 5 : 6)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. பெதஸ்தா குளத்தினருகே சுகமடையும்படி காத்துக் கொண்டிருந்தவர்கள் யார்?
   குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். (யோவான் 5 : 3)
2. வியாதிக்காரர்கள் பெதஸ்தா குளத்தினருகே ஏன் காத்துக் கொண்டிருந்தார்கள்?
   ஏனெனில் சில சமயங்களிலே தேவ தூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான், தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதிஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான். (யோவான் 5 : 4)
3. “நீ சொஸ்தமாகவெண்டுமென்று விரும்புகிறாயா” என்று முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்த மனுஷனிடத்தில் கேட்டது யார்? அவன் அவரிடம் கூறிய பதில் யாது?
   a. படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி, சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். (யோவான் 5 : 6)
   b. அதற்கு வியாதிஸ்தன், “ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான்” என்றான். (யோவான் 5 : 7)
4. கர்த்தராகிய இயேசு முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்த மனுஷனை எவ்வாறு சுகமாக்கினார்?
   இயேசு அவனை நோக்கி, “எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட” என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது. (யோவான் 5 : 8, 9)

***************

# மிகுதியான மீன்களைப்பிடித்தல்

(லூக்கா 5 : 1 - 11)

**I.** *மனப்பாட வசனம்* : (2 Marks)

ஏசாயா 1 : 19

நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.

**II.** *போதனை* : (2 Marks)

நாம் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது அவர் நம்மை ஏராளமாய் ஆசீர்வதிக்கிறார்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. இயேசு எந்த கடலருகே நின்ற போது திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் பெருகினார்கள்?
   கெனேசரேத்துக்கடல் (லூக். 5 : 1)
2. கெனேசரேத் கடலருகே இயேசு எத்தனை படவுகளைக் கண்டார்?
   இரண்டு (லூக். 5 : 2)
3. கர்த்தராகிய இயேசு யாருடைய படவில் ஏறி ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார்?
   சீமோனுடைய படவில் (லூக். 5 : 3)
4. ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்று இயேசு யாரிடம் சொன்னார்?
   சீமோனிடம் (லூக். 5 : 4)
5. சீமோன் இராமுழுவதும் பிரயாசப்பட்டு எவ்வளவு மீன்களை பிடித்தான்?
   ஒன்றும் அகப்படவில்லை. (லூக். 5 : 5)
6. இயேசுவின் வார்த்தையின்படி சீமோன் வலையைப் போட்டபோது எவ்வளவு மீன்களைப் பிடித்தார்கள்?
   வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். (லூக். 5 : 6)
7. திரளான மீன்களைப்பிடித்ததினிமித்தம் பிரமிப்படைந்து இயேசுவின் பாதத்தில் விழுந்தது யார்?
   சீமோன் (லூக். 5 : 8)
8. சீமோனின் கூட்டாளிகள் யார்?
   செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும், யோவானும். (லூக். 5 : 10)
9. இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்று இயேசு யாரிடம் சொன்னார்?
   சீமோன் (லூக். 5 : 10)
10. தங்கள் படவுகளைக் கரையிலே நிறுத்திவிட்டு இயேசுவுக்குப் பின்சென்றவர்கள் யார்?
    சீமோன் பேதுரு, யோவான், யாக்கோபு. (லூக். 5 : 10, 11)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. கர்த்தராகிய இயேசு கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது, திரளான ஜனங்கள் ஏன் அவரிடத்தில் நெருங்கினார்கள்?
   தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள். (லூக். 5 : 1)
2. திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி இயேசுவினிடத்தில் வந்தபோது அவர் என்ன செய்தார்?
   சீமோனுடைய படவில் ஏறி ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார். (லூக். 5 : 3)

3. இயேசு சீமோனுடைய படவில் உட்கார்ந்து போதகம் பண்ணிமுடித்த பின்பு, அவனிடத்தில் என்ன சொன்னார்?

“ஆழத்திலே தள்ளிக்கொண்டு போய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்” என்றார். (லூக். 5 : 4)

4. இயேசு ஆழத்திலே வலையைப்போடும்படி சீமோனிடம் கூறியபோது, அவன் என்ன மறுஉத்தரவு சொன்னான்?

ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையை போடுகிறேன் என்றான். (லூக். 5 : 5)

5. சீமோன் பேதுருவும் அவன் கூட்டாளிகளும் மற்ற படவிலிருந்தவர்களை ஏன் அழைத்தார்கள்?

தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்ற படவிலிருந்து கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்குச் சைகைக்காட்டினார்கள். (லூக். 5 : 7)

6. திரளான மீன்களைப் பிடித்ததினிமித்தம் சீமோன் பேதுரு பிரமிப்படைந்து இயேசுவிடம் என்ன சொன்னான்?

சீமோன் பேதுரு இயேசுவின் பாதத்தில் விழுந்து, ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்றான். (லூக். 5 : 8)

7. ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்று இயேசுவிடம் கூறியது யார்? இயேசு அவனிடம் என்ன சொன்னார்?

(i) சீமோன் பேதுரு

(ii) இயேசு அவனிடம், பயப்படாதே இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்று சொன்னார். (லூக். 5 : 10)

***************

வகுப்பு : 2

பாடம்-13

# கர்த்தராகிய இயேசு திமிர்வாதக் காரனைச் சுகமாக்கியது

(மாற்கு 2 : 1 - 12)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யாக்கோபு 2 : 26

அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

மாற்கு 11 : 22

இயேசு அவர்களை நோக்கி, தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.

**II.** *போதனை :* (2 Marks)

நாம் நம்முடைய விசுவாசத்தை நம் கிரியைகளின் மூலம் வெளிப்படுத்தும்போது, கர்த்தர் அதைக் கனம்பண்ணுகிறார்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (1 Mark)

1. திமிர்வாதக்காரன் எந்த ஊரில் இருந்தான்?
   கப்பர்நகூமில் (மாற் 2 : 1)
2. திமிர்வாதக்காரனை எத்தனை பேர் சுமந்து கொண்டு வந்தார்கள்?
   நாலுபேர் (மாற் 2 : 3)
3. திமிர்வாதக்காரனை சுமந்து கொண்டு வந்தவர்கள் இயேசுவுக்கு சமீபமாய் ஏன் வரமுடியவில்லை?
   ஜனக்கூட்டத்தினிமித்தம் (மாற் 2 : 4)
4. திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை, இயேசு இருந்த வீட்டிற்கு எவ்வாறு கொண்டுவந்தார்கள்?
   வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கி, அவனை இறக்கினார்கள். (மாற் 2 : 4)
5. இயேசு திமிர்வாதக்காரனை எதைக்கண்டு சுகமாக்கினார்?
   அவனை சுமந்து கொண்டு வந்தவர்களின் விசுவாசத்தைக் கண்டு, சுகமாக்கினார். (மாற். 2 : 5)
6. "இயேசு தேவதூஷணம் சொல்லுகிறார்" என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்தது யார்?
   வேதபாரகரில் சிலர் (மாற். 2 : 6)
7. பூமியிலே பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது?
   மனுஷகுமாரனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. (மாற். 2 : 10)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. கர்த்தராகிய இயேசு கப்பர்நகூமிலே இருக்கிறார் என்று கேள்விப்பட்டபோது ஜனங்கள் என்ன செய்தார்கள்?
   வாசலுக்கு முன்னும் நிற்க இடம்போததபடிக்கு அநேகர் கூடிவந்தார்கள். (மாற் 2 : 2)
2. திமிர்வாதக்காரனை எவ்வாறு இயேசுவினிடத்தில் கொண்டுவந்தார்கள்?
   நாலுபேர் திமிர்வாதக்கானை சுமந்து கொண்டு வந்தார்கள். ஜனகூட்டத்தினிமித்தம், வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கி அவன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள். (மாற் 2 : 4)
3. இயேசு திமிர்வாதக்காரனை சுமந்து கொண்டு வந்தவர்களின் விசுவாசத்தைக் கண்டு என்ன செய்தார்?
   இயேசு திமிர்வாதக்காரனை நோக்கி, "மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்றார். (மாற். 2 : 5)

4. இயேசு திமிர்வாதக்காரனிடம், ''மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது'' என்று கூறிய போது, வேதபாரகர் என்ன சிந்தித்தார்கள்?

தேவன் ஒருவர் மாத்திரமே பாவங்களை மன்னிக்கத்தக்கவராகையால் இவர் தேவதூஷணம் சொல்லுகிறார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்தார்கள். (மாற். 2 : 7)

5. வேதபாரகனின் சிந்தனையை அறிந்த இயேசு அவர்களிடம் என்ன சொன்னார்?

இயேசு அவர்களிடம் ''பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷக்குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்'' என்றார். (மாற் 2 : 10)

6. இயேசு திமிர்வாதக்காரனிடம் என்ன சொன்னபோது, அவன் எழுந்து போனான்?

இயேசு திமிர்வாதக்காரனிடம், நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார். உடனே அவன் எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு போனான். (மாற் 2 : 11)

7. திமிர்வாதக்காரன் படுக்கையை எடுத்துக்கொண்டு போனதைக்கண்ட ஜனங்கள் என்ன செய்தார்கள்?

ஜனங்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு, நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். (மாற் 2 : 12)

***************

வகுப்பு : 2

பாடம்-14

# கர்த்தராகிய இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலரைத் தெரிந்தெடுத்தது

(லூாக்கா 6 : 12 -16 ; 9 : 1, 2 ; யோவான் 20 : 21)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

நீதிமொழிகள் 3 : 6

உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள் ; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

**II.** *போதனை :* (2 Marks)

கர்த்தராகிய இயேசு ஜெபித்து தம்முடைய அப்போஸ்தலரைத் தெரிந்தெடுத்தது போல, நாமுங்கூட எல்லாவற்றையும் ஜெபத்துடன் செய்ய வேண்டும்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (1 Mark)

1. கர்த்தராகிய இயேசு ஜெபம் பண்ணும்படியாக எங்கு போனார்?
   மலைக்கு போனார். (லூாக். 6 : 12)
2. கர்த்தராகிய இயேசு பன்னிரண்டு சீஷர்களை தெரிந்து கொள்ளும்முன்பு எவ்வளவு நேரம் ஜெபித்தார்?
   இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபித்தார். (லூாக். 6 : 12)
3. இயேசு சீஷர்களை வரவழைத்து, அவர்களில் எத்தனைபேரை தெரிந்துக்கொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்?
   பன்னிரண்டு
4. இயேசு தெரிந்து கொள்ளப்பட்ட பன்னிரண்டு சீஷர்களுக்கு என்ன பெயரிட்டார்?
   அப்போஸ்தலர் (லூாக். 6 : 13)
5. அப்போஸ்தலன் என்பதின் அர்த்தம் என்ன?
   அனுப்பப்பட்டவன் (யோவான் 20 : 21)
6. சகல பிசாசுகளையும் துரத்தும் அதிகாரத்தை இயேசு யாருக்குக் கொடுத்தார்?
   பன்னிரண்டு சீஷர்களுக்குக் கொடுத்தார். (யோவான் 9 : 1)
7. எதைக்குறித்துப் பிரசங்கிக்கும்படி இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கு கட்டளையிட்டார்?
   தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டார். (லூாக். 9:1)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. இயேசு பன்னிரண்டு சீஷர்களைத் ரிந்தெடுக்கும்முன்பு என்ன செய்தார்?
   ஒரு மலையின்மேல் ஏறி இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணினார்.(லூாக். 6 : 12)
2. பன்னிரண்டு அப்போஸ்தலரின் பெயர்களை கூறு?
   1. பேதுரு 2. அந்திரேயா 3. யாக்கோபு 4. யோவான்
   5. பிலிப்பு 6. பர்தொலொமேயு 7. மத்தேயு 8. தோமா
   9. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு 10. செலோத்தே
   11. யூதா 12. யூதாஸ் காரியோத்து .(லூாக். 6 : 14-16)
3. கர்த்தராகிய இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கு கொடுத்த அதிகாரமும் வல்லமையும் யாது?
   சகல பிசாசுகளை துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார். (லூாக். 9 : 1)
4. இயேசு தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலரை (சீஷர்களை) என்ன செய்யும்படி அனுப்பினார்?
   தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அனுப்பினார். (லூாக். 9 : 2)

வகுப்பு : 2

பாடம்-15

# நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சுகம் பெற்றது

(லூக்கா 7 : 1 - 10)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 107 : 20

அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.

**II.** *போதனை* : (2 Marks)

நம்மை நாமே தாழ்த்தி கர்த்தரை விசுவாசிப்போமாயின் அவர் தம்முடைய வார்த்தையினால் நம்மைச் சுகமாக்க உண்மையுள்ளவராயிருக்கிறார்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. கப்பர்நகூமில் யாருடைய வேலைக்காரன் வியாதிப்பட்டு மரணத்தருவாயிலிருந்தான்?
   நூற்றுக்கதிபதியின் பிரியமான வேலைக்காரன். (லூக். 7 : 2)
2. நூற்றுக்கதிபதி தன்னுடைய வேலைக்காரனை சுகமாக்கும்படி, இயேசுவிடம் வேண்டிக் கொள்வதற்காக யாலை அனுப்பினான்?
   யூதருடைய மூப்பர்களை அனுப்பினான் (லூக். 7 : 3)
3. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் சுகமாக்கும்படி யூதருடைய மூப்பர்கள் யாரிடம் கருத்தாய் வேண்டிக்கொண்டார்கள்?
   இயேசுவிடம் வேண்டிக்கொண்டார்கள். (லூக். 7 : 4)
4. நூற்றுக்கதிபதி யூத ஜனங்களை நேசித்து, அவர்களுக்கு என்ன கட்டிக்கொடுத்தான்?
   ஜெப ஆலயம் (லூக் 7 : 5)
5. இயேசு நூற்றுக்கதிபதியின் வீட்டுக்குச் சமீபமானபோது அவன் இயேசுவை சந்திக்கும்படி யாரை அனுப்பினான்?
   தன்னுடைய சினேகிதரை அனுப்பினான். (லூக். 7 : 6)
6. இஸ்ரவேலருக்குள்ளம் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று இயேசு யாரிடம் கூறினார்?
   தமக்குப் பின் செல்லுகிற திரளான ஜனங்களிடம் கூறினார். (லூக். 7 : 9)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. நூற்றுக்கதிபதி யூதருடைய மூப்பரை ஏன் இயேசுவிடம் அனுப்பினான்?
   நூற்றுக்கதிபதி இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்க வேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்வதற்காக அனுப்பினான். (லூக். 7 : 3)
2. யூதருடைய மூப்பர் நூற்றுக்கதிபதியைப் பற்றி இயேசுவிடம் கூறிய சாட்சி என்ன?
   இயேசுவிடம் நீர் தயவு செய்கிறதற்கு அவன் பாத்திரவானாயிருக்கிறான். நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான். ஒரு ஜெப ஆலயத்தைக்காட்டினான் என்றார்கள். (லூக். 7 : 4, 5)
3. கர்த்தராகிய இயேசு நூற்றுக்கதிபதியின் வீட்டிற்கு சமீபமானபோது நூற்றுக்கதிபதி என்ன செய்தான்?
   நூற்றுக்கதிபதி கர்த்தராகிய இயேசுவிடம் தன் சிநேகிதரை அனுப்பி, அவர் தன் வீட்டிற்குவர தான் பாத்திரான் அல்ல என்றும், அவர் ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் தன் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றும் சொல்லி அனுப்பினான். (லூக். 7 : 6-8)
4. நூற்றுக்கதிபதி சொல்லி அனுப்பிய வார்த்தைகளைக் கேட்டபோது இயேசு என்ன செய்தார்?
   கர்த்தராகிய இயேசு ஆச்சரியமடைந்து, இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். (லூக். 7 : 9)
5. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் எப்போது சுகமடைந்தான்?
   கர்த்தராகிய இயேசுவிடம் அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, வியாதியாய்க் கிடந்த வேலைக்காரன் சுகமடைந்திருக்கிறதைக் கண்டார்கள். (லூக். 7 : 10)

***************

# கர்த்தராகிய இயேசு நாயீனூர் விதவையின் மகனை உயிரோடெழுப்பியது

(லூக்கா 7 : 11 - 17)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

எரேமியா 32 : 27

இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலேசெய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?

லூக்கா 1 : 37

தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான்.

**II.** *போதனை* : (2 Marks)

கர்த்தராகிய இயேசு சர்வவல்லமையுள்ள தேவன். ஆவராலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. கர்த்தராகிய இயேசு எந்த ஊரில் விதவையின் மகனை உயிரோடெழுப்பினார்?
   நாயீன் ஊரில் (லூக் 7 : 11)
2. நாயீன் ஊர் விதவைக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தனர்?
   ஒரே ஒரு மகன் (லூக். 7 : 12)
3. கர்த்தராகிய இயேசு நாயீன் ஊர் விதவையின் மேல் மனதுருகி என்ன சொன்னார்?
   அழாதே என்றார். (லூக். 7 : 13)
4. மகா தீர்க்கதரிசியானவர் - என்று ஜனங்கள் யாரைக் குறித்து கூறினார்கள்?
   கர்த்தராகிய இயேசு (லூக். 7 : 16)
5. நாயீன் ஊர் விதவையின் மரித்த மகனை உயிரோடெழுப்பியது யார்?
   கர்த்தராகிய இயேசு (லூக். 7 : 15)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. கர்த்தராகிய இயேசு நாயீன் ஊரின் வாசலுக்கு சமீபித்தபோது கண்ட காட்சி என்ன?
   மரித்துப்போன ஒரு வாலிபனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள். அவன் ஒரு விதவையின் ஒரே மகனாயிருந்தான்.(லூக். 7 : 12)
2. கர்த்தராகிய இயேசு நாயீன் ஊர் விதவையிடம் என்ன சொன்னார்?
   நாயீன் ஊர் விதவை அழுதுகொண்டு தன் மகனின் பாடையின் பின்னாலே வந்து கொண்டிருந்தாள். கர்த்தராகிய இயேசு அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி அழாதே என்று சொன்னார். (லூக். 7 : 13)
3. கர்த்தராகிய இயேசு நாயீன் ஊர் விதவையின் மகனை எவ்வாறு உயிரோடெழுப்பினார்?
   கர்த்தராகிய இயேசு பாடையின் அருகில் வந்து பாடையைத் தொட்டு, வாலிபனே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். (லூக். 7:14,15)
4. கர்த்தராகிய இயேசு நாயீன் ஊர் விதவையின் மகனை உயிரோடெழுப்பியதைக் கண்ட ஜனங்கள் என்ன செய்தார்கள்?
   ஜனங்கள் பயமடைந்து மகாதீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். (லூக். 7 : 16)

***************

வகுப்பு : 2

பாடம்-17

# கர்த்தராகிய இயேசு சிறுபிள்ளைகளின் நண்பர்

(மாற்கு 10 : 13 - 16)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

மாற்கு 10 : 15, 16

எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

**II.** *போதனை :* (2 Marks)

சிறுபிள்ளைகளைப்போல் தங்களைத் தாழ்த்தி கர்த்தரிடம் செல்லுகிறவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார். அப்படிப்பட்டவர்கள் மாத்திரமே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (1 Mark)

1. சிறு பிள்ளைகளைக் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் கொண்டு வந்தது யார்?
   சில தாய்மார்கள். (மாற் 10 : 13)
2. சிறுபிள்ளைகளை கர்த்தராகிய இயேசுவினிடத்தில் கொண்டு வந்தவர்களை அதட்டியது யார்?
   சீஷர்கள் (மாற் 10 : 13)
3. சிறுபிள்ளைகளை நேசித்தது யார்?
   கர்த்தராகிய இயேசு (மாற் 10 : 14)
4. நாம் தேவனுடைய ராஜ்யத்தை யாரைப்போல் ஏற்றுக்கொள்ள வேண்டும்?
   சிறுபிள்ளையைப்போல் ஏற்றுக்கொள்ள வேண்டும். (மாற் 10 :15)
5. சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு தடைபண்ணாதிருங்கள் என்று கூறியது யார்?
   கர்த்தராகிய இயேசு (மாற். 10 : 14)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. சிறுபிள்ளைகளைக் கர்த்தராகிய இயேசுவிடத்தில் ஏன் கொண்டு வந்தார்கள்?
   கர்த்தராகிய இயேசு சிறுபிள்ளைகளை தொட்டு ஆசீர்வதிக்கும்படி கொண்டுவந்தார்கள். (மாற். 10 : 13)
2. சிறு பிள்ளைகளை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தவர்களை சீஷர்கள் அதட்டினபோது, இயேசு என்ன செய்தார்?
   இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வஜகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடைபண்ணாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்றார், (மாற் 10 : 14)
3. சிறுபிள்ளைகளை மாதிரியாக உபயோகித்து கர்த்தராகிய இயேசு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து கற்பித்தது என்ன?
   "எவனாகிலும் சிறுபிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளா விட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்று கற்பித்தார். (மாற்.10 : 15)
4. சிறுபிள்ளைகளை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தபோது அவர் என்ன செய்தார்?
   அவர் அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார். (மாற் 10 : 16)

***************

வகுப்பு : 2

பாடம்-18

# கர்த்தராகிய இயேசு குருடனாயிருந்த பர்திமேயுவுக்குப் பார்வையளித்தது

(மாற்கு 10 : 46 - 52)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 120 : 1

என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், அவர் எனக்குச் செவிக்கொடுத்தார்.

**II.** *போதனை* : (2 Marks)

கர்த்தர் நம்முடைய ஜெபங்களைக் கேட்டு, நமக்கு உதவிசெய்கிற இரக்கமுள்ள தேவனாயிருக்கிறார்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. எரிகோவின் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்.டிருந்தது யார்?
   பர்திமேயு என்னும் குருடன் (மாற் 10 : 46)
2. பர்திமேயு என்னும் குருடனின் தகப்பன் யார்?
   திமேயு மாற் (10 : 46)
3. கர்த்தராகிய இயேசு எந்தப் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு வரும்போது பர்திமேயுவை சந்தித்தார்?
   எரிகோ (மாற் 10 : 46)
4. பர்திமேயு என்னும் குருடன் இயேசுவைக் கூப்பிட்டபோது ஜனங்கள் என்ன செய்தார்கள்?
   பேசாதிருக்கும்படி அவனை அதட்டினார்கள். (மாற் 10 : 48)
5. பர்திமேயு என்னும் குருடனை அழைத்து வரும்படி சொன்னது யார்?
   கர்த்தராகிய இயேசு (மாற் 10 : 49)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. பாதிமேயு என்னும் குருடன் நசரேயனாகிய இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டபோது என்ன செய்தான்?
   “இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்” என்று கூப்பிட்டான். (மாற்10:47)
2. ‘இயேசுவே இரங்கும்’ என்று கூப்பிட்ட பர்திமேயு என்னும் குருடனை பேசாதிருக்கும்படி ஜனங்கள் அதட்டியபோது அவன் என்ன செய்தான்?
   “இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாய் கூப்பிட்டான். (மாற் 10 : 48)
3. கர்த்தராகிய இயேசு பர்திமேயு என்னும் குருடனை அழைத்தபோது அவன் என்ன செய்தான்?
   அவன் தன் மேல் வஸ்திரத்தை எறிந்துவிட்டு எழுந்து இயேசுவினிடத்தில் வந்தான்.(மாற் 10 : 50)
4. கர்த்தராகிய இயேசு பர்திமேயு என்னும் குருடனிடம் என்ன கேட்டார்?
   இயேசு “:நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய்” என்று கேட்டார். (மாற் 10 : 51)
5. ‘நான் உனக்கு என்ன செய்யவேண்டும்’ என்று இயேசு பர்திமேயுவிடம் கேட்டபோது அவன் என்ன சொன்னான்?
   “ஆண்டவரே நான் பார்வையடைய வேண்டும்” என்றான். (மாற் 10 : 51)
6. பர்திமேயு என்னும் குருடன் எப்பொழுது பார்வையடைந்தான்?
   கர்த்தராகிய இயேசு, நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று கூறியவுடனே அவன் பார்வையடைந்தான். (மாற் 10 : 51)
7. பர்திமேயு என்னும் குருடன் பார்வையடைந்தவுடன் என்ன செய்தான்?
   வழியிலே இயேசுவிக்குப் பின்சென்றான். (மாற் 10 : 52)

***************

வகுப்பு : 2

பாடம்-19

# விதவையின் காணிக்கை

(மாற்கு 12 : 35, 41 - 44)

**I.** *மனப்பாட வசனம்* : (2 Marks)

மாற்கு 12 : 30

உன தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும், அன்புக்கூறுவாயாக என்பதே பிரதான கற்பனை.

**II.** *போதனை* : (2 Marks)

விதவைக்குத் தேவன் மேல் விசுவாசமும் பெரிதான அன்பும் இருந்தபடியினாலேயே, தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததையெல்லாம் அவள் கொடுக்கக் கூடியவனாயிருந்தாள். அது போன்றே நாம் நம் ஜீவனையே கர்த்தருக்கென்று கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. கர்த்தராகிய இயேசு எங்கே உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார்?
   தேவாலயத்தில் (மாற் 12 : 35)
2. ஏழையான விதவை எவ்வளவு காணிக்கை போட்டாள்?
   ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். (மாற் 12 : 42)
3. காணிக்கைப் பெட்டியில் அதிகமாய் காணிக்கை போட்டவர்கள் யார்?
   ஐசுவரியவான்கள் அநேகர். (மாற் 12 : 41)
4. தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்து காணிக்கை போட்டவர்கள் யார்?
   ஐசுவரியவான்கள் (மாற் 12 : 44)
5. தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் காணிக்கையாக போட்டது யார்?
   விதவை (மாற் 12 :44)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. கர்த்தராகிய இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணிமுடித்தபின்பு என்ன செய்தார்?
   கர்த்தராகிய இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார். (மாற் 12 : 41)
2. கர்த்தராகிய இயேசு விதவையின் காணிக்கையைக் குறித்து தம்முடைய சீஷர்களிடம் என்ன சொன்னார்?
   இயேசு, “காணிக்கைப்பெட்டியில் பணம் போட்ட எல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய் போட்டாள் தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள்” என்றாள். (மாற் 12 : 43, 44)
3. கர்த்தராகிய இயேசு ஐசுவரியவான்களின் காணிக்கையைக் குறித்து என்ன சொன்னாள்?
   இயேசு, “ஐசுவரியவான்கள் எல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப்போட்டார்கள்” என்றார். (மாற் 12 : 44)

***************

வகுப்பு : 2

பாடம்-20

# கர்த்தராகிய இயேசு காற்றையும் கடலையும் அமர்த்தினது

(மாற்கு 4 : 35 - 41)

**I.** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 33 : 9

அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும்.

**II.** *போதனை :* (2 Marks)

நாம் நம்முடைய தேவனை நோக்கிக் கூப்பிடும்போது அவர் இயற்கைக்கு மேலான காரியங்களைச் செய்ய வல்லவராயிருக்கிறார். ஏனெனில் முழுசிருஷ்டியும் அவருக்குக் கீழடங்கியிருக்கிறது.

**III.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (1 Mark)

1. கர்த்தராகிய இயேசு யாரோடுகூட படவில் பிரயாணம் செய்தார்?
   சீஷர்களுடன் படவில் பிரயாணம் செய்தார். (மாற் 4 : 35, 36)
2. கர்த்தராகிய இயேசு எங்கே தலையணையை வைத்து நித்திரை செய்தார்?
   கப்பலின் பின்னனியத்தில் (மாற் 4 : 38)
3. இயேசு நித்திரை செய்து கொண்டிருந்தபோது அவரை எழுப்பியது யார்?
   சீஷர்கள் (மாற் 4 : 38)
4. காற்றையும் கடலையும் அமர்த்தியவர் யார்?
   கர்த்தராகிய இயேசு (மாற் 4 : 39)
5. சீஷர்களின் பயத்தையும் அவிசுவாசத்தையும் உணர்த்தியது யார்?
   இயேசு (மாற் 4 : 40)

**IV.** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. கர்த்தராகிய இயேசுவும் அவருடைய சீஷர்களும் படவில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது என்ன சம்பவித்தது?
   பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. (மாற் 4 : 37)
2. சுழல்காற்றினால் அலைகள் படவின்மேல் மோதினபோது, இயேசு என்ன செய்து கொண்டிருந்தார்?
   கப்பலின் பின்னணியத்தில் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். (மாற்4:38)
3. சுழல்காற்றினால் அலைகள் படவின்மேல் மோதினவுடன் சீஷர்கள் என்ன செய்தார்கள்?
   சீஷர்கள் இயேசுவை எழுப்பி, போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். (மாற் 4 : 38)
4. கர்த்தராகிய இயேசு காற்றையும் கடலையும் எவ்வாறு அமர்த்தினார்?
   கர்த்தராகிய இயேசு எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து, இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. (மாற் 4 : 39)
5. கர்த்தராகிய இயேசு காற்றையும் கடலையும் அமர்த்திய பின்பு, சீஷர்களிடம் என்ன சொன்னார்?
   கர்த்தராகிய இயேசு சீஷர்களிடம், ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். (மாற் 4 : 40)
6. கர்த்தராகிய இயேசு காற்றையும் கடலையும் அமர்த்தியதைக் கண்ட சீஷர்கள் என்ன செய்தார்கள்?
   சீஷர்கள் மிகவும் பயந்து, இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

***************